மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருதி எவ்வளவு விரைவாக செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ, அதை முழுமையாக எடுக்க இந்த அரசு முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே வேகம் எல்லாப் பகுதிகளுக்கும் வேண்டும்.

தமிழகத்தில் தொழில் முனைவோருக்கு தொழிற் பயிற்சி நிலையம்.

548—(*வினா எண். 13815) திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக ஒரு தொழிற்பயிற்சி நிலையம் Centre for entrepreneurship Development) அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் பொருட்டு தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழில் துவங்க முன் வருபவர்கள் எவ்வளவோ கடனைப் பெற்று துவக்குகிறார்கள். அப்படி துவக்குகிற தொழில் வியாபார ரீதியில் லாபம் ஈட்டுவனவாகவும், அந்தத் தொழில் முடங்காமல் இருக்கின்ற வகையிலும், பெற்ற கடனைத் திருப்பி அளிக்கின்ற வகையிலும் அந்தத் தொழிலை எப்படி நடத்துவது என்றுகூடத் தெரியாமல் தத்தளிக்கின்ற வகையில் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே தொழிலை லாபகரமாக நடத்துவதற்கு பயிற்சி கொடுக்கின்ற வகையில் ஒரு முன்னோடித் திட்டத்தை கொண்டு வந்து, தமிழக முதல்வரோடு கலந்து பேசி மீண்டும் இதனை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதைப்பற்றி ஆலோசிக்கலாம். ஏற்கனவே மாவட்டத்தில் தொழில் மன்றம் இருக்கிறது. அதை முழுமையாக பயன் படுத்திக் கொண்டால்கூட தேவையான ஆலோசனை முழுமை யாக கிடைக்கும் என்று நம்புகிறேன். பயிற்சி என்பதைவிட அவர்களுக்கு எப்படி ஊக்கமும் ஆக்கமும் தருவது என்பது பற்றி அவர்களையே அழைத்துப் பேசி, தொழிலைத் துவக்குங்கள் என்று தூண்டி விடுவதற்கான ஒரு அமைப்பை உருவாக்கலாமா என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். அத்தோடு சேர்த்து இதனையும் பரிசீலிக்கலாம்.

திரு. வே. கு. சின்னசாமி: தலைவர் அவர்களே, தொழில் துவங்குவதற்கு தொழில் முனைவர்கள் வருகின்ற நேரத்தில் அந்த உரிமம் கொடுக்கும்போதே அல்லது அந்த விண்ணப்பங்களை பரிசீலிக்கும்போதே எல்லா வகையான தேவைகளையும் அதற்கான அனுமதியையும் ஒரே இடத்தில் கொடுக்க வேண்டும் என்ற வகையில் சிங்கிள் விண்டோ சிஸ்டம் முறையில் தேசிய வங்கிகளிலே உடனடியாக கடனைப் பெறுவதற்கும், மின்சார வாரியத்திலிருந்து மின்சாரம் பெறுவதற்கும், மற்ற உரிமங்கள் வழங்குவதற்கு தேவையான அனுமதி முழுவதையும் ஒரே இடத்தில் பெறும்வகையில் லைசன்ஸை பெற்ற உடன் வேலை துவங்குகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? ஏனென்றால் லைசன்ஸைப் பெறுவதற்குள் அவர்களுக்கு தொழிலைத் துவங்கலாமா, வேண்டாமா என்று யோசிக்கிற வகையில் நிலைமை இருப்பதால், இந்த சிங்கிள் விண்டோ சிஸ்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா, அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்டந் தோறும் இந்த சிங்கிள் விண்டோ சிஸ்டத்தில் உள்ளபடிதான் மாவட்ட ஆட்சித் தலைவரும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் அழைத்து, வந்திருக்கிற மனுக்களை ஆய்வு செய்து வருகிறார்கள். எனவே அவர்கள் உரிமம் பெறுவதற்கு ஒரு மாதத்திற்கு மேல் காத்திருக்க வேண்டிய நிலைமை வராது. அந்த அளவுக்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இருந்

தாலும் கூட மனு செய்பவர்கள் அதிலே இருக்கிற சட்டதிட்டங்களைக்கூட நிறைவேற்றாமல் மனுவைக் கொடுக்கிற காரணத்தால் பல இனங்களில் காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. எனவே மனு

(முற்பகல் 10-20)

கொடுக்கக்கூடியவர்கள் கூட அவர்கள் சொல்கிற அந்த விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று ஓரளவிற்கு அக்கறையோடு செயல்படுவார்களானால், நிச்சயமாக இந்தத் திட்டம் செயல்படுவதற்கு அல்லது உரிமம் பெறுவதற்கு தடையிருக்காது என்று கருதுகிறேன். இப்போது புதியதாக ஏற்கனவே மானியத்தில் அறிவித்திருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படி எந்தெந்த மாவட்டத்தில் குறிப்பாக எந்தெந்த ஒன்றியத்தில் என்ன தொழிலை ஆரம்பித்தால் அது வெற்றிகரமாக இருக்கும், விற்பனை மார்க்கெட்டிங் எப்படி இருக்கும், ரா-மெடீரியல்ஸ் எப்படி கிடைக்கும் என்பதை ஆய்வு செய்து பொது மக்களுக்கு தெரிகிற வகையில் ஒரு புத்தகமாகப் போட்டு, இந்த இந்தப் பகுதியில் இந்த இந்தத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று பொது மக்களுக்கு விளம்பரமாகக் கூட கொடுத்து விடலாம். அப்படி கொடுக்கிறபோது அவர்கள் சுலபமாக அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கும், அதிலே என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன, எப்படி செயல்பட வேண்டுமென்பதற்கும், நிலைமைகளைத் தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பாக இருக்குமென்று கருதுகிறேன். ஆகவே அந்தவகையில் முழுமையாக செயல்படுத்தப்படுகிறபோது இந்தத் தொழில்களை ஆரம்பிக்கக்கூடியவர்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்குமென்றும் கருதுகிறேன்.

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், செருதலைக்குடியில் விவசாய கூலிகளுக்கு வீட்டுமனைப் பட்டா.

534—(*வினா எண். 7927) **திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், செருதலைக்குடி கிராமத்தில் பல ஆண்டுக்காலமாக